# புதிய சமுதாயம்

**“தோன்றின் புகழோடு தோன்றுக, அஃதிலார்**

**தோன்றலின் தோன்றாமை நன்று”**

என்று நம் பொய்யாமொழிப் புலவரான திருவள்ளுவர் கூறியுள்ளார். நாம் இப்புவியில் பிறந்ததற்காக ஏதாவது ஒன்றைச் சாதித்தே தீர வேண்டும். அவ்வாறு சாதிக்கத் தவறுபவன் இப்புவியில் பிறக்காமல் இருப்பதே நன்று என்று மொழிந்துள்ளார் தெய்வப்புலவர்.

அவருடைய கூற்றை ஆதரிக்கும் வகையில், ‘‘சாதனை செய்யுங்கள்; சாதிக்கத் தயாராகுங்கள்’’ என்ற வரிகள் இடம் பெற்றுள்ளன. தமிழர்களான நமக்கு தற்போது இருக்கும் ஒரே ஒரு சோதனை, வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய எதிர்கொள்ளும் சவால்கள்தாம். இச்சோதனையை நாம் சாதனையாக உருப்பெற வைக்க வேண்டும். இச்சாதனைக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் எந்தவொரு செயலையும் நாம் முறியடிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

அவ்வாறு நம் முறியடிக்க வேண்டிய முதல் செயல் நம்மிடையே காணப்படும் மூடநம்பிக்கைகளே ஆகும். ‘‘இராத்திரியானால் வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது; வெளியே செல்லும் போது பூனை குறுக்கே சென்றால், நீர் அருந்திவிட்டுப் போ’’ என்பதெல்லாம் மூடநம்பிக்கைகளில் சில. இத்தகைய மூட நம்பிக்கைகளால் நாம் பல நல்ல வாய்ப்புகளை இழந்து வருகிறோம். அப்படிப்பட்ட மூட நம்பிக்கைகளை ஒழித்தால்தான் தமிழர்கள் உயர்ந்த வாழ்க்கை நிலையை அடைய முடியும்.

அடுத்ததாக, நாம் நம்முடைய எண்ணப்போக்குகளையும் மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். பேராசை, பொறாமை போன்ற தீய எண்ணங்களை அடியோடு அழித்துவிட வேண்டும். ‘‘பேராசை பெரு நட்டம்’’ என்ற கூற்றைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இது நூற்றுக்கு நூறு உண்மை. பேராசை, மற்றும் பிறர் மீது பொறாமை கொள்வது போன்ற எண்ணங்களை விட்டொழியுங்கள். நம்மீது மற்றவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் வரும்படி நடந்து கொள்ளுங்கள். தோல்வியைக் கண்டு துவண்டுவிடாமல், அதையே வெற்றிப்படியாகக் கொண்டு வாழ்க்கையில் வெற்றிக்கொடி நாட்டுங்கள்.

இவை மட்டுமே நம்மைச் சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடையச் செய்வதில்லை. இவற்றுக்கெல்லாம் மேலாகக் கல்விச் செல்வமே நமக்கு உயர்ந்த நிலையை அடைய பெரும்பங்கு வகிக்கின்றது.

**“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு**
**மாடல்ல மற்ற யவை”**
என்ற திருவள்ளுவரின் கூற்றைக் கேட்டிருப்பீர்கள். அது மட்டுமல்லாமல்,

**“கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே”** - என்பதையும் நாம் அறிவோம்.

செல்வங்களிலேயே முக்கியமான செல்வமாகிய கல்விச் செல்வம் இல்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. பிச்சை எடுத்துப் படிக்கக்கூடிய நிலை வந்தாலும் நாம் கல்வி கற்பதை நிறுத்திவிடக்கூடாது, ‘‘கற்றது கை மண்ணளவு; கல்லாதது உலகளவு’’. ஆகவே நாம் நம் வாழ்நாள் முழுதும் ஏதாவது ஒன்றைக் கற்றுக் கொண்டே வர வேண்டும். இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் பல புதிய கண்டுபிடிப்புகளும் மாற்றங்களும் ஏற்பட்டுக்கொண்டே வருகின்றன. அதற்கு ஏற்றாற்போல் நாம் நம்மை மேம்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையேல் நாம் பின்தங்கிவிடுவோம்.

இறுதியாக, நாம் பிறக்கும் போதே நம்முடன் பிறந்த ஒன்றை நாம் வலுப்படுத்திக் கொள்ள வேண்டும். அதுதான் தன்னம்பிக்கை. ஐந்து விரலும் இணைந்தால்தான் தன்னம்பிக்கை பிறக்கும். நமக்கு எந்தவொரு செயல் கொடுக்கப்பட்டாலும், ‘‘என்னால் இதைச் செய்ய முடியாது. எனக்கு இது வேண்டாம்’’ என்று கூறாமல் என்னால் முடியும், நான் இதைச் சாதித்துக் காட்டுவேன் என்ற தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். உள்ளங்கை அளவு நிலப்பரப்பைக் கொண்டிருக்கும் சிங்கப்பூர், ஒரு வளர்ச்சி கண்ட நாடாகத் திகழும்போது, இந்நாட்டில் வாழும் நம் தமிழர்களால் ஏன் உயர்ந்த வாழ்க்கை நிலையை அடைய முடியாது? எல்லாம் நம்மிடம்தான் உள்ளது.

ஆகவே, தமிழர்களான நாம் உயர்ந்த வாழ்க்கை நிலையை அடைவதற்குப் பாடுபட வேண்டும். அதற்காக நாம் கண்டிப்பாக நம்மிடையே காணப்படும் மூட நம்பிக்கைகளையும் எண்ணப் போக்குகளையும் மாற்றிக்கொள்ள வேண்டும். அதோடு, தன்னம்பிக்கையுடன் உயர்ந்த கல்வி கற்றவராகவும் திகழ வேண்டும். இவையே நம்மை ஓர் உயர்ந்த சமுதாயமாக இவ்வுலகிற்கு எடுத்துக்காட்டும்.

**சாரதம்பாள்**
**உயர்நிலை 4 உயர்தமிழ்**
**யுவன் சிங் உயர்நிலைப்பள்ளி**